# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஐந்தாம் தவணைப் பரீட்சை - 2022
## Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 5th Term Term Examination - 2022

FWC

பொருளியல் I
Economics I

Two Hours

Gr -13 (2022)

21 T I

**அறிவுறுத்தல்கள்:**
- ♣ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ♣ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- ♣ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்தும் பின்பற்றுக.


***1* தொடக்கம் *30* வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் *(1),(2),(3),(4),(5)* என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து அதனை குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (x) இடுவது மூலம் காட்டுக.**

01. பின்வருவனவற்றுள் நியமக்கூற்று எது?
   1) வட்டி வீதங்களில் ஏற்படும் உயர்வு நுகர்வை அதிகரித்தல்
   2) வட்டி வீதங்களில் ஏற்படும் வீழ்ச்சி நுகர்வை குறைக்கும்
   3) வட்டி வீதங்களுக்கும் நுகர்வுக்கும் இடையிலான தொடர்பு எதிர்க்கணியமாகும்
   4) வட்டி வீதத்தைக் குறைக்க வேண்டும்
   5) கடந்த மாதம் வைப்புக்கள் மீதான சராசரி வட்டி வீதம் அதிகரித்தது

02. தொழிற்பிரிப்பினை பயன்படுத்திக் கொள்ள ஒரு தொழிற்சாலை தானியங்கி (automaton) இயந்திர முறையை அறிமுகப்படுத்தியது பின்வருவனவற்றுள் எது அதிகம் அதிகரிக்க வாய்ப்புள்ளது.
   1) சராசரி உற்பத்திச் செலவு
   2) தொழிலாளர்களின் வேலைத்திருப்தி
   3) தொழிலாளர் உற்பத்தி திறன்
   4) ஒவ்வொரு தொழிலாளர்களினதும் திறன் எல்லை
   5) புத்தாக்கங்கள்

03. திட்டமிடல் பொருளாதாரத்தில் காணப்படும் நிறுவனங்களின் நடத்தை பற்றிய சரியான கூற்று எது?
   1) நிறுவனங்கள் போட்டிச் சந்தைகளில் செயற்படும்.
   2) நிறுவனங்கள் உற்பத்திக்கான தனியார் மற்றும் வெளிவாரிச் செலவுகளை கருத்தில் கொள்ள வாய்ப்புக்கள் அதிகம்
   3) நிறுவனங்கள் விலைப்பொறிமுறையின் மூலம் உற்பத்திக்கான சமிக்ஞைகளை வழங்கும்
   4) நிறுவனங்கள் சார்பு விலைகளின் அடிப்படையில் வள ஒதுக்கீட்டுத் தீர்மானங்களை மேற்கொள்ளும்
   5) நிறுவனங்கள் பங்குதாரர்களின் நன்மைக்காக இலாபமீட்ட முயற்சிக்கும்


04. "பாரம்பரிய முறைகளை பயன்படுத்தும் விவசாயிகளிடம் நிதி வசதி இல்லை பெரும்பாலும் குடும்ப உறுப்பினர்களை பகுதி நேர அடிப்படையில் வேலைக்கு அமர்த்துகின்றனர்." விவசாயத்தில் வேலை செய்யும் பயறிசிகள், முன்னேற்றமடைந்தால் உற்பத்தி சாத்திய வளையியில் இந்நிகழ்வு எவ்வாறு காட்டப்படும்.





1) R யிலிருந்து T வரையான அசைவு
2) S யிலிருந்து T வரையான அசைவு
3) S யிலிருந்து R வரையான அசைவு
4) T யிலிருந்து R வரையான அசைவு
5) K யிலிருந்து T வரையான அசைவு

05. கிமன் பண்டமொன்றின் மிகப் பிரதான இயல்பு யாது?
1) வருமானம் அதிகரிக்கும் போது கேள்வி குறைவடையும் வருமானம் குறைவடையும் போது கேள்வி அதிகரிக்கும்.
2) தரத்திற்கு குறைவான நிறப்புத் தன்மை காணப்படும்.
3) விலைகள் மாறாதவிடத்து பொருளின் கேள்வித்தொகை மாற்றமடையாது.
4) விலை விளைவு, வருமான விளைவு எதிராகக் காணப்படும்.
5) விலை வீழ்ச்சியடையும் போது கேள்வித் தொகை குறையும் விலை அதிகரிக்கும் போது கேள்வித் தொகை அதிகரிக்கும்

06. பின்வரும் வரை படங்கள் X பொருளுக்கான சந்தையில் ஏற்படும் மாற்றத்தின் விளைவாக Yப் பொருளுக்கான சந்தையில் விளைவினைக் காட்டுகின்றன.




x பொருளுக்கான சந்தையில் ஏற்படும் மாற்றம்




y பொருளுக்கான சந்தையில் ஏற்படும் மாற்றம்

வரைபடங்களின் மூலம் என்ன முடிவினைப் பெறமுடியும்
1) x மற்றும் y நிரப்புப் பொருளாகும்.
2) x மற்றும் y இணைந்த நிரம்பல் பொருளாகும்.
3) x மற்றும் y பதிலீட்டுப் பொருளாகும்.
4) y பொருள் x பொருளிலிருந்து பெறப்பட்டது.
5) x மற்றும் y தொடர்பற்ற பொருளாகும்.

07. ஒரு பொருளின் விலை சார் கேள்வி நெகிழ்ச்சி, நெகிழ்ச்சியுள்ளதாக இருக்கும் போது அது தொடர்பாக உங்களால் ஏற்றுக் கொள்ளக் கூடிய சேர்க்கை யாது?

| | பதிலீடுகளின் கிடைப்பனவுத் தன்மை | நுகர்வுக்காக வருமானத்தில் செலவிடும் வீதம் |
|---|---|---|
| 1) | அதிகம் | அதிகம் |
| 2) | அதிகம் | குறைவு |
| 3) | குறைவு | அதிகம் |
| 4) | குறைவு | குறைவு |
| 5) | அதிகம் | மாறாது |

08. குறிப்பிட்ட பண்டத்தின் விலை 10% மாற்றமடையும் போது அதன் நிரம்பல் தொகை 30% மாற்றமடைந்தது. இதன் நிரம்பல் வளையி மேல்நோக்கிச் செல்லும் போது நிரம்பல் நெகிழ்ச்சிக்குணகத்தின் மாற்றத்தைக் காட்டும் சரியான கூற்று எது?

1) ஒன்று கூடிய பெறுமதி படிப்படியாக வீழ்ச்சியடையும்
2) ஒன்று குறைந்த பெறுமதி படிப்படியாக அதிகரிக்கும்
3) ஒன்று குறைந்த பெறுமதி படிப்படியாக வீழ்ச்சியடையும்
4) ஒன்றுக்கு கூடிய பெறுமதி படிப்படியாக அதிகரிக்கும்
5) ஒன்றுக்கு சமமானது படிப்படியாக மாறாது

09.
- S பொருளினுடைய கோள்விக்கும் P பொருளினுடைய விலைக்குமான குறுக்கு கேூள்வி நெகிழ்ச்சி + 2.5 ஆகும்.
- S பொருளினுடைய கேள்விக்கும் R பொருளினுடைய விலைக்குமான குறுக்கு கேள்வி நெகிழ்ச்சி $-2.5$ ஆகும்.
- P பொருளினுடைய கேள்விக்கும் R பொருளினுடைய விலைக்குமான குறுக்கு கேள்வி நெகிழ்ச்சி $-_{2.5}$ ஆகும்.

P,R,S பொருட்கள் தொடர்பில் சரியானது எது?

1) S மற்றும் P பதிலீட்டுப் பொருட்கள், R இழிவுப் பொருள்
2) S மற்றும் P பதிலீட்டுப் பொருட்கள் P மற்றும் R நிரப்பு பொருள்கள்
3) S மற்றும் P நிரப்புப் பொருட்கள் P மற்றும் R நிரப்புப் பொருள்கள்
4) S மற்றும் P நிரப்புப் பொருட்கள் R இழிவுப் பொருள்
5) S மற்றும் P நிரப்புப் பொருட்கள் P மற்றும் R இழிவுப் பொருள்

10. சந்தையொன்றில் பண்டமொன்றிற்கு நிலவிய கேள்வி மற்றும் நிரம்பல் சமன்பாடுகள் பின்வருமாறு

$Qd = 30 - 2P$, $QS = 2 + 2P$


அரசாங்கமானது ரூபா 10 தனவிலையினை (floor price) ரூபா 12 ஆக அதிகரித்தது எனின் இதன் காரணமாக எழும் விளைவு யாது?

1) மிகைநிரம்பலானது 8 அலகுகளால் அதிகரிக்கும்
2) மிகைநிரம்பலானது 16 அலகுகளால் அதிகரிக்கும்
3) மிகைக்கேள்வியானது 16 அலகுகளால் அதிகரிக்கும்
4) மிகைநிரம்பலானது 4 அலகளால் அதிகரிக்கும்
5) மிகைக்கேள்வியானது 8 அலங்குகளால் அதிகரிக்கும்

11. விவசாயப் பண்டங்களின் சந்தைவிலைகள் வருடத்தின் சில காலப்பகுதியில் உயர்ந்த மட்டத்திலும் வேறு சில காலங்களில் குறைந்த மட்டத்திலும் காணப்படும். இந் நிலைமைக்கு பிரதான காரணியாக அமைவது?

1) நெகிழ்ச்சியற்ற கேள்வியும் நெகிழ்வுள்ள நிரம்பலும் நிலவுதல்
2) நெகிழ்வுள்ள கேள்வியும் நெகிழ்வுள்ள நிரம்பலும் நிலவுதல்
3) நெகிழ்வற்ற கேள்வியும் நெகிழ்வற்ற நிரம்பலும் நிலவுதல்
4) பூரண நெகிழ்வுள்ள கேள்வியும் பூரண நெகிழ்வற்ற நிரம்பலும் நிலவுதல்
5) நெகிழ்வுள்ள கேள்வியும் நெகிழ்வற்ற நிரம்பலும் நிலவுதல்

12. பின்வரும் வரைபடம் சாதாரண பொருள் ஒன்றிற்கான கேள்வி நிரம்பல் வளையிகளைக் காட்டுகின்றது $E_1$ ஆரம்ப சமநிலைப் புள்ளியாகும். $E_2$ இல் புதிய சமநிலை தோன்றுவதற்கு எத்தகைய மாற்றங்கள் இடம்பெற வேண்டும் சரியான விடை எது?




1) குறித்த பொருளின் கேள்வியும் நிரம்பலும் வீழ்ச்சியடைதல்
2) நுகர்வோர் வருமானம் அதிகரித்தலும் குறித்த பொருளின் நிரம்பல் வீழ்ச்சியடைதலும்
3) குறித்த பொருளின் நிரப்புப் பொருளின் விலை அதிகரித்தலும் குறித்த பொருளின் நிரம்பல் அதிகரித்தலும்
4) குறித்த பொருளின் கேள்வியும் நிரம்பலும் வீழ்ச்சியடைதல்
5) நுகர்வோர் வருமானம் வீழ்ச்சியடைதலும் குறித்த பொருளின் நிரம்பல் வீழ்ச்சியடைதலும்

13. விவசாயப் பண்டமொன்றின் கேள்வி மற்றும் நிரம்பல் சமன்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன.

$Qd = 320 - 4P$ $\qquad$ $Qs = -80 + 2P$

இப்பண்டன் அலகு ஒன்றிற்கு அரசாங்கம் ரூபா. 5 அலகு மானியமாக வழங்கப்பட்ட பின் கொள்வனவாளன் செலுத்தும் விலை யாது?

1) ரூபா 38 2) ரூபா 70 3) ரூபா 45 4) ரூபா 65 5) ரூபா 68

14. துவிச்சக்கர வண்டிக்கான சந்தை சமநிலையில் உள்ளதாக கருதுக. துவிச்சக்கர வண்டிகளின் நிரம்பல் வீழ்ச்சியடையும் அதே வேளை அதற்கான கேள்வி அதிகரிக்குமாயின் சந்தையில் துவிச்சக்கர வண்டிகளின் விலை மற்றும் தொகை பற்றி நீர் என்ன முடிவு எடுப்பீர்.

1) விலை அதிகரிக்கும் ஆனால் தொகையில் ஏற்படும் மாற்றம் நிச்சயமற்றது
2) விலை, தொகை இரண்டுமே அதிகரிக்கும்
3) விலையும் தொகையும் மாற்றமடையாது
4) விலை, தொகை இரண்டுமே வீழ்ச்சியடையும்
5) விலை குறைவடையும் ஆனால் தொகை அதிகரிக்கும்

15. அரசு வரிச்சுமையின் பெரும்பகுதியை நுகர்வோர் தாங்கிக்கொள்ள விரும்புகிறது. எந்த வகையான நெகிழ்ச்சி மூலம் இந்த இலக்கை அடைய முடியும்

1) விலைசார் கேள்வி நெகிழ்ச்சியுடையதாக இருக்கும் போதாகும்.
2) விலைசார் கேள்வி அலகு நெகிழ்வுள்ளதாக இருக்கும் போதாகும்.
3) பூரண நெகிழ்வற்ற நிரம்பல் இருக்கும் போதாகும்.
4) விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சியற்றதாக இருக்கும் போதாகும்.
5) விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சியுள்ளதாக இருக்கும் போதாகும்.

16. பின்வரும் அட்டவணை அப்பிளுக்கான சந்தைக் கேள்வி மற்றும் சந்தை நிரம்பலைக் காட்டுகிறது 1 கிலோவிற்கு ரூபா. 3 சந்தை விலையில் சந்தை சமநிலையின்மையிலுள்ளது.

| **அப்பிள் 1 kg விலை (ரூபா)** | **சந்தைக்கேள்வி அளவுகள் (kg)** | **சந்தை நிரம்பல் kg (அளவுகள்)** |
|---|---|---|
| 1 | 220 | 120 |
| 2 | 190 | 130 |
| 3 | 150 | 140 |
| 4 | 130 | 150 |
| 5 | 100 | 160 |


கிலோகிராம் ஒன்றிற்கு ரூபா 3 விலையில் சந்தை சமநிலை அடைய அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1) அப்பிளுக்கு 1 கிலோகிராமிற்கு ரூபா 2 நேரில் வரி விதிக்க வேண்டும்.
2) முழு நிரம்பலையும் 1கிலோகிராமிற்கு ரூபா 3 ற்கு கொள்வனவு செய்கிறது மற்றும் 1 கிலோ கிராம் ரூபா 2ற்கு விற்பனை செய்கிறது.
3) ஒரு கிலோ கிராமிற்கு ரூபா 3 இனை உயர்ந்தபட்பச விலையாக நிர்ணயிக்க வேண்டும்.
4) அப்பிள் உற்பத்திற்கு 1 கிலோகிராமிகு ரூபா 2 ஆல் மானியம் வழங்க வேண்டும்.
5) அப்பிள் உற்பத்திக்கு ஒரு கிலோகிராமிற்கு ரூபா3 இனை குறைந்தபட்ச விலையாக விதிக்க வேண்டும்.

17. $Qd = 60 - 3P$ எனும் கேள்வி வனையினையுடைய பொருளொன்றை உற்பத்தி செய்கையில் விலைக்கேள்வி நெகிழ்ச்சி ஒன்றுக்கும் சமமாகும் இந்நிலையில்.


1) மொத்தமிகை உச்சமாகும்
2) பொருளாதார இலாபம் உச்சமாகும்
3) விற்பனை அளவு உச்சமாகும்
4) விற்பனை வருமானம் உச்சமாகும்
5) உற்பத்திச் செலவு உச்சமாகும்

18. இங்கு தரப்பட்டுள்ள வரைபடமானது பால்மாவிற்கான சமநிலையினைக் காட்டுகின்றது. பொருளின் சமநிலையில் நிரம்பல் நெகிழ்ச்சி யாது?




1) 0.25
2) 0.36
3) 0.58
4) 1.0
5) 0.85

19. நெல்லுக்கான சந்தைக் கேள்வி மற்றும் நிரம்பல் வளையிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளன.




அரசு கிலோ கிராம். ஒன்றிற்கு ரூபா 50 குறைந்தபட்ச விலையாக விதித்து மிகை நிரம்பலை கொள்வனவு செய்வதாக தீர்மானித்துள்ளது. அவ்விலை உதவி திட்டத்தினால் ஏற்படும் மீள முடியா நலனிழப்பு யாது?

1) ரூபா 40 2) ரூபா 200 3) ரூபா 100 4) ரூபா 80 5) ரூபா 80

20. சராசரி உற்பத்தி அதி உச்சமான ஒரு நிலையிலிருக்கும் போது அதற்கு ஒத்த செலவான.

1) சராசரி செலவு அதி உச்சமான ஒரு நிலையிலிருக்கும்
2) சராசரி மாறும் செலவு அதி உச்சமான ஒரு நிலையிலிருக்கும்
3) சராசரி மாறும் செலவு அதி தாழ்ந்த ஒரு நிலையிலிருக்கும்
4) எல்லைச் செலவு அதி தாழ்ந்த நிலையிலிருக்கும்
5) மொத்தச் செலவு அதி தாழ்ந்த நிலையிலிருக்கும்

21. பின்வரும் அட்டவணையானது ஒரு நிறுவனத்தின் மொத்தச் செலவு மற்றும் எல்லைச் செலவுகளைக் காட்டுகிறது.

| வெளியீடு (அலகுகள்) | மொத்தச் செலவு (ரூபா) | எல்லைச் செலவு (ரூபா) |
|---|---|---|
| 1 | 340 | 40 |
| 2 | 375 | 35 |
| 3 | 400 | 25 |
| 4 | 435 | 35 |
| 5 | 475 | 40 |

6 அலகுகளை உற்பத்தி செய்வதற்கான சராசரி நிலையான செலவு யாது?
1) ரூபா 60 2) ரூபா 180 3) ரூபா 50 4) ரூபா 300 5) ரூபா 75

22. ஒரு உற்பத்திக்காரணியின் நிரம்பல் முடிவிலி நெகிழ்ச்சியுடையதாயின் அதன் சம்பாத்தியத்தில் உள்ளடங்கியிருப்பது.
1) அனைத்தும் மாற்றல் வருமானமாகும்
2) பொருளியல் வாடகை மற்றும் மாற்றல் வருமானம் சமமாகும்.
3) பெரும்பகுதி பொருளாதார வாடகையாகும்.
4) பெரும்பகுதி மாற்றல் வருமானமாகும்.
5) அனைத்தும் பொருளாதார வாடகையாகும்.

23. பின்வருவனவற்றுள் ஒன்று நிதியல்லாச் சொத்துக்களில் உள்ளடங்காது.
1) கடலிலிருந்து புதிய நிலங்களை உருவாக்கல்
2) பொருளாதார ரீதியாக மதிப்பிடக்கூடிய ஒப்பந்தங்கள்
3) தகவல் தொடர்பாடல் மற்றும் வலையமைப்புக்கள்
4) களஞ்சியப்படுத்தல் நிலையங்கள்
5) தொழிற்சாலைகள்

24. சந்தை விலையில் கணிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி பெறுமதியை அடிப்படை விலையான மொத்த பெறுமதி சேர்க்கையாக மாற்றுவதற்கு என்ன சீராக்கம் செய்ய வேண்டும்.
1) உற்பத்தி பொருள் மீதான வரிகளை கூட்டி உற்பத்தி பொருள் மீதான மானியத்தைக் கழிக்க வேண்டும்.
2) உற்பத்தி பொருள் மீதான வரிகளை கழித்து உற்பத்தி பொருள் மீதான மானியத்தைக் கூட்ட வேண்டும்.
3) ஏனைய நாடுகளிலிருந்த தேறிய முதன்மை வருமானங்களை கழிக்க வேண்டும்.
4) இலாபங்களை கூட்டி மாற்றல்களை கழிக்க வேண்டும்.
5) ஏற்றுமதிகளைக் கூட்டி இறக்குமதிகளைக் கழிக்க வேண்டும்.

25. செலவு அணுகுமுறையின் கீழ் மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் கணிப்பிடும் போது மூன்று பிரதான கூறுகளைக் கூட்ட வேண்டும்.
பின்வருவனவற்றுள் சரியானது எது?
1) அரச இறுதி நுகர்வுச் செலவு + மொத்த மூலதன ஆக்கம் + பொருட்கள் பணிகள் ஏற்றுமதிகள்
2) இறுதி மொத்த நுகர்வுச் செலவு + மொத்த மூலதன ஆக்கம் + தேறிய ஏற்றுமதிகள்
3) இறுதி மொத்த நுகர்வுச் செலவு + மொத்த நிலையா மூலதன ஆக்கம் + பொருட்கள் பணிகள் ஏற்றுமதிகள்
4) இறுதி மொத்த நுகர்வுச் செலவு + இருப்புக்களின் மாற்றம் + தேறிய ஏற்றுமதிகள்
5) வீட்டுத்துறை இறுதி நுகர்வுச் செலவு + மொத்த மூலதன ஆக்கம் + பொருட்கள் பணிகள் தேறிய ஏற்றுமதிகள்

26. அரசாங்கமும் வெளிநாட்டுத்துறையும் இல்லாத எளிய பேரினம் பொருளாதார மாதிரியினைக் கருதுக. சேமிப்புச் சார்பு $S = -_{600} + 0.2y$ ஆக வரையறுக்கப்படும் நிலையில் முதலீடு 400 மில் ரூபாவால் அதிகரிக்குமாயின் நுகர்வு எவ்வளவால் அதிகரிக்கும்
1) 1600 மில் ரூபா 2) 160 மில் ரூபா 3) 1800 மில் ரூபா
4) 900 மில் ரூபா 5) 2000 மில் ரூபா

27. பின்வருவனவற்றுள் எக்காரணி பெருக்கியின் பெறுமதி அதிகரிக்க காரணமாகும்.
   1) அரசாங்கத்தின் முதலீட்டுச் செலவு அதிகரித்தல்
   2) நுகர்வுச் செலவு அதிகரித்தல்
   3) ஏற்றுமதிகளின் அளவு அதிகரித்தல்
   4) எல்லைச் சேமிப்பு நாட்டம் அதிகரித்தல்
   5) எல்லை நுகர்வு நாட்டம் அதிகரித்தல்

28. பின்வருவனவற்றுள் மிகக் குறைந்த திரவத்தன்மை கொண்ட சொத்து எது?
   1) கேள்வி வைப்புக்கள்
   2) திறைசேரி உண்டியல்கள்
   3) திறைசேரி முறிகள்
   4) கடன்களும் முற்பணங்களும்
   5) மெய்ச் சொத்துக்கள்

29. இலங்கையில் பணவீக்கத்தை கணிப்பீடு செய்யும் போது கொழும்பு நுகர்வோர் மற்றும் தேசிய நுகர்வோர் சுட்டெண்ணிலிருந்து நீக்கப்படும் செலவுகளின் சேர்க்கைகள் மிகவும் பொருத்தமானது எது?
   1) வட்டி வீதமும், வீட்டு வாடகையும், கல்வி
   2) எரிபொருள், நீர்க்கட்டணங்கள், மின்சாரக்கட்டணம்
   3) முச்சக்கரவண்டிகள், கடல் உணவுகள், தேங்காய்
   4) உருளைக் கிழங்கு, புகையிலை, குடிபானங்கள்
   5) பச்சையான உணவு, எரிபொருள், போக்குவரத்துச் செலவு

30. ஒரு நாட்டின் மெய்த் தேசிய வருமானம் 3% ஆல் குறைந்துள்ளது. இத்தகைய நிலைமைக்கு பிரதான காரணியாக அமைவது.
   1) பணவீக்க வீதம் 6% ஆக இருந்த போது பெயரளவு தேசிய வருமானம் 3% ஆல் குறைந்தது.
   2) பணவீக்க வீதம் 3% ஆக இருந்த போது பெயரளவு தேசிய வருமானம் 6% ஆல் குறைந்தது.
   3) பணவீக்க வீதம் 6% ஆக இருந்த போது பெயரளவு தேசிய வருமானம் 3% ஆல் உயர்ந்தது.
   4) பணவீக்க வீதம் 3% ஆக இருந்த போது பெயரளவு தேசிய வருமானம் 6% ஆல் உயர்ந்தது.
   5) பணவீக்க வீதம் 3% ஆக இருக்கும் போது பெயரளவு தேசிய வருமானம் 3% இருந்தது.

31. திரவத்தன்மை முன்னுரிமைக் கோட்பாட்டின் படி மிகச் சரியான சேர்க்கையை தெரிவு செய்க.

| **பணத்திற்கான கேள்வி** | **வட்டி வீதத்தால் நிர்ணயிக்கப்படுதல்** | **வருமான மாற்றத்தால் நிரிணயிக்கப்படும்** |
|---|---|---|
| 1. ஊக நோக்கம் | ஆம் | இல்லை |
| 2. ஊ நோக்கம் | இல்லை | ஆம் |
| 3. கொடுக்கல் வாங்கல் | ஆம் | இல்லை |
| 4. கொடுக்கல் வாங்கல் | இல்லை | இல்லை |
| 5. பாதுகாப்பு நோக்கம் | ஆம் | இல்லை |

32. நேரில் வரிகள் அதிகரிக்கப்படுமாயின் கேள்வித்தூண்டல் பணவீக்கத்திலும் செலவுத் தூண்டல் பணவீக்கத்திலும் என்ன தாக்கத்தை ஏற்படுத்தும்

| | **கேள்வித்தூண்டல் பணவீக்கம்** | **செலவுத்தூண்டல் பணவீக்கம்** |
|---|---|---|
| 1) | வீழ்ச்சியடையும் | வீழ்ச்சியடையும் |
| 2) | வீழ்ச்சியடையும் | அதிகரிக்கும் |
| 3) | அதிகரிக்கும் | வீழ்ச்சியடையும் |
| 4) | மாறாது | வீழ்ச்சியடையும் |
| 5) | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |

33. பெயரளவிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி 200 மில்லியன் எனவும் பண நிரம்பல் 80 மில்லியன் எனவும் கருதுக. பணத்தின் சுற்றோட்ட வேகம் யாது?
   1) 0.4  2) 2.0  3) 2.5  4) 3.0  5) 4.0

34. ஒரு நாட்டின் பணவீக்கம் வேகமாக அதிகரித்து வருகின்றது இப் பிரச்சினையை குறைப்பதற்கான பணவியல் நடவடிக்கைக்கு உதாரணமாக எதனை கருதுவீர்?
   1) வருமான வரியை அதிகரித்தல்.
   2) வட்டி வீதத்தை அதிகரித்தல்.
   3) சில உற்பத்திகளுக்கு உயர்ந்தபட்ச விலையை நிர்ணயித்தல்.
   4) அதி முக்கியமான தொழில்களுக்கு மானியம் வழங்கள்.
   5) புதிய நாணயத் தாள்களை அச்சிடல்.

35. இலங்கை மத்திய வங்கியானது வணிக வங்கிகளுடன் துணை நில் கடன் வசதி ஒப்பந்தங்களை மேற்கொள்ளும் போது
   1) அழைப்புக்கடன் சந்தையில் வட்டி வீதங்கள் மேல் நோக்கி அசையும்.
   2) அழைப்புக்கடன் சந்தையில் வட்டி வீதங்கள் கீழ் நோக்கி அசையும்.
   3) பணி நிரம்பல் சுருக்கமடையும்.
   4) வணிக வங்கிகள் மத்திய வங்கியில் வைத்துள்ள வைப்புக்கள் குறைவடையும்.
   5) அழைப்புக்கடன் சந்தையில் வட்டி வீதங்களில் பாதிப்பு ஏற்படாது.

36. 20% ஒதுக்குத் தேவையைக் கொண்ட மிகை ஒதுக்குகளை கொண்டிராத வங்கி கட்டமைப்பு காணப்படும் போது மத்திய வங்கியானது திறந்த சந்தையில் 200 மில ரூபா பெறுமதியான அரச முறிகளை கொள்வனவு செய்யுமாயின்.
   1) பண நிரம்பல் ரூபா 1000 மில்லியனால் அதிகரிக்கும்.
   2) பண நிரம்பல் ரூபா 1000 மில்லியனால் வீழ்ச்சியடையும்.
   3) பண நிரம்பல் ரூபா 400 மில்லியனால் வீழ்ச்சியடையும்.
   4) பண நிரம்பல் ரூபா 200 மில்லியனால் அதிகரிக்கும்.
   5) பண நிரம்பல் ரூபா 180 மில்லியனால் வீழ்ச்சியடையும்.

37. பின்வருவனவற்றுள் ஒன்று மத்திய வங்கியின் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டு மூலங்களில் உள்ளடங்காது அதை இனங்காண்க.
   1) விலை உறுதிப்பாடு
   2) நிதியியல் முறைகள்
   3) நிதியியல் நிறுவனங்கள்
   4) நிதிச் சந்தைகள்
   5) நிதி உட்கட்டமைப்புக்கள்

38. அரசாங்க தோல்வி எப்போதும் உருவாவது
   1) சந்தையில் வெளிவாரி விளைவுகள் காணப்படுகின்றமையால்.
   2) சந்தையினால் பொதுப் பொருள்கள் வழங்கப்படாத போதாகும்.
   3) சந்தையில் தலையிடுவதில் அரசாங்கம் தோல்வியடையும் போதாகும்.
   4) அரசாங்கத் தலையீடு சசமூக நலனில் தேசிய செலவீட்டை ஏற்படுத்துவதனாலாகும்.
   5) சமூக நலனானது சமூக நன்மையை விடக் கூடுதலாக இருக்கும் போதாகும்.

39. பின்வருவனவற்றுள் ஒன்று தீய பொதுப் பொருளுக்கு உதாரணமாக கொள்ள முடியாது.
   1) சமூக மற்றும் நிறுவன ஊழல்கள்.
   2) மனிதக் கடத்தல்கள்.
   3) உலகப்பயங்கரவாதம்.
   4) வீட்டுத்துறை மற்றும் தொழிற்சாலைகளிலிருந்து சூழலுக்கு வெளியேற்றப்படும் குப்பைகள் மற்றும் கழிவுகள்.
   5) பெருந்தெருக்கள்

40. வரியின் சட்டரீதியான தாக்கமும் வரியின் பொருளாதார ரீதியான தாக்கம் வேறுபடுவதற்குரிய காரணம்
   1) வரிப்பெருக்கி
   2) அரசாங்க கொள்கைகள்
   3) வருமான மாற்றம்
   4) வரிப்பெயர்ச்சி
   5) வரிச்சுவை

41. ஒரு அரசாங்கம் நகர மையத்தை விமான நிலையத்துடன் இணைக்க புதிய புகையிரதப் பாதையை அமைப்பது குறித்து பரிசீலித்த செலவு நன்மை பகுப்பாய்வு பின்வருமாறு

| **செலவுகள்** | **மில் ரூபா** |
|---|---|
| தனிப்பட்ட செலவுகள் | 1.0 |
| சமூகச் செலவுகள் | 1.7 |
| தனிப்பட்ட நன்மைகள் | 0.5 |
| வெளிவாரி நன்மைகள் | 1.8 |

அரசாங்கத்தின் முடிவும் அதற்குரிய காரணம் என்னவாக இருக்கும்

| | முடிவு | காரணம் |
|---|---|---|
| 1) | நடைமுறைப்படுத்தும் | மொத்தச் செலவுகள் வெளிவாரி நன்மை விட அதிகம் |
| 2) | நடைமுறைப்படுத்தும் | தனியார் செலவுகள் தனியார் நன்மை விட அதிகம் |
| 3) | நடைமுறைப்படுத்தாது | சமூக நன்மைகள் சமூக செலவுகளை விட அதிகம் |
| 4) | நடைமுறைப்படுத்தாது | தனிப்பட்ட நன்மையிலும் பார்க்க தனிப்பட்ட செலவு அதிகமாகும். |
| 5) | நடைமுறைப்படுத்தாது | தனியார் செலவுகள் சமூகச் செலவிலும் குறைவாகும். |

42. இலங்கையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக அரசிறை மற்றும் மீண்டெழும் செலவினங்கள் 2020 ஆண்டில் எவ்வளவு சதவீதமாக காணப்பட்டது.

| | **அரசிறை** | **மீண்டெழும் செலவினம்** |
|---|---|---|
| 1) | 11.6 | 21.0 |
| 2) | 12.6 | 16.3 |
| 3) | 9.1 | 17.0 |
| 4) | 8.7 | 5.3 |
| 5) | 9.1 | 4.1 |

43. 2020ல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அரசின் உள்நாட்டு கடனின் அளவு 60.6 ஆகும். உள்நாட்டுக் கடனைப் பெற்றுக் கொள்வதற்கு அரசாங்கம் பயன்படுத்திய பிரதான கடன் கருவி யாது?
1) திறைசேரி உண்டியல்கள்
2) திறைசேரி முறிகள்
3) இலங்கை அபிவிருத்தி முறிகள்
4) மத்திய வங்கியின் முற்பணங்கள்
5) சர்வதேச அபிவிருத்தி முறைகள்

44. ஒரு அரசாங்கம் வருமான வரி வீதங்களை குறைந்ததுடன் நாணய மதிப்பிறக்கத்தினையும் மேற்கொண்டது. இம் முடிவுகள் பின்வரும் கொள்கைகளில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் சரியான சேர்க்கையை தெரிவு செய்க.

| | **இறைக்கொள்கை** | **நாணயக்கொள்கை** | **நிரம்பல் பக்ககொள்கை** |
|---|---|---|---|
| 1) | சுருக்கத்தாக்கம் | விரிவுத்தாக்கம் | சுருக்கத்தாக்கம் |
| 2) | விரிவுத்தாக்கம் | சுருக்கத்தாக்கம் | விரிவுத்தாக்கம் |
| 3) | விரிவுத்தாக்கம் | விரிவுத்தாக்கம் | சுருக்கத்தாக்கம் |
| 4) | விரிவுத்தாக்கம் | விரிவுத்தாக்கம் | விரிவுத்தாக்கம் |
| 5) | சுருக்கத்தாக்கம் | விரிவுத்தாக்கம் | விரிவுத்தாக்கம் |

45. நாடு x மற்றும் நாடு y இரண்டும் அரிசி மற்றும் மேசைகளை உற்பத்தி செய்கின்றன அவை தமது வளங்களின் 50% பயன்படுத்தி அரிசியையும் மற்றைய 50% ஐ மேசைகளை உற்பத்தி செய்யவும் பயன்படுத்துகின்றன ஒவ்வொரு வெளியீடுகளின் பெறுமதிகளை பின்வரும் அட்டவணையில் காட்டப்படுள்ளது.

| நாடு | **அரிசி** | **மேசைகள்** |
|---|---|---|
| x | 150 | 100 |
| y | 100 | 50 |

அட்டவணையிலிருந்து என்ன முடிவினை எடுக்க முடியும்

1) நாடு x இரண்டு பொருட்களின் உற்பத்தியிலும் ஒப்பீட்டு நன்மை கொண்டுள்ளது.
2) நாடு y இரண்டு பொருட்களின் உற்பத்திலும் ஒப்பீட்டு நன்மை கொண்டுள்ளது.
3) நாடு y அரிசி உற்பத்தியில் ஒப்பீட்டு நன்மை கொண்டுள்ளது.
4) நாடு y மேசை உற்பத்தியில் ஒப்பீட்டு நன்மை கொண்டுள்ளது.
5) நாடு y மேசை உற்பத்தியில் முழு நன்மை கொண்டுள்ளது.

46. குறித்த ஒரு காலப்பகுதியில் ஏற்றுமதிகளின் விலைகள் 20% இனால் அதிகரிக்க வர்த்த மாற்றவீதம் 25% இனால் வீழ்ச்சியடைந்து இருக்குமாயின் இறக்குமதி விலைகள் உயர்ந்திருக்க வேண்டியது

1) 20% 2) 80% 3) 40% 4) 60% 5) 25%

47. ஒரு பொருளாதாரம் கென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கில் பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ளது இந்த நிதிப்பற்றாக்குறையை குறைப்பதற்கு அரசாங்கம் யாது செய்யலாம்?

1) நிலையான நாணய மாற்று வீதத்தை ஏற்றுக்கொள்ளல்
2) அதிக வெளிநாட்டு நேரடி முதலீட்டை ஈர்க்க வேண்டும்
3) வருமான வரி வீதங்களை குறைத்தல்
4) வட்டி வீதங்களை குறைக்க வேண்டும்
5) வருமான வரிகளை அதிகரிக்க வேண்டும்

48. கீழே தரப்பட்டுள்ள அட்டவணை நாடொன்றின் கருதுகோள் ரீதியான செனமதி நிலுவையின் நடைமுறைக் கணக்கின் தரவுகளைக் காட்டுகிறது.

| **வகை** | **ரூபா பில்லியன்** |
|---|---|
| ஏற்றுமதிகள் | 18990 |
| இறக்குமதிகள் | 18715 |
| வர்த்தக நிலுவை | 275 |
| தேசிய முதன்மை இரண்டாம் நிலை வருமானம் | 1130 |

இப் பொருளாதாரத்தின் நடைமுறைக்கு மீதியின் பெறுமதி யாது?

1) 855 2) 1405 3) 1680 4) – 1405 5) 39910

49. ஒரு நாடு சென்மதி நிலுவைப் பற்றாக்குறை கொண்டுள்ளது. இதனால் அதன் நாணயத்தின் பெறுமதியைக் குறைக்கிறது பின்வரும் எச் சேர்க்கையானது நீண்ட காலத்தில் அதன் பற்றாக்குறை குறைக்க வழிவுருகிறது.

| | **ஏற்றுமதிக்கான கேள்வியின் விலை நெகிழ்ச்சி** | **இறக்குமதிக்கான கேள்வியின் விலை நெகிழ்ச்சி** |
|---|---|---|
| 1) | 0.5 க்கும் குறைவாக | 0.5 க்கும் குறைவாக |
| 2) | 1 க்கும் குறைவாக | பூச்சியம் |
| 3) | 0.5 க்கு மேல் | 0.5 மேல் |
| 4) | பூச்சியம் | 1 க்கு குறைவாக |
| 5) | பூச்சியம் | பூச்சியம் |

50. இலங்கை ரூபாவின் பெறுமதித் தேவையானது

1) சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருவதை அதைரியப்படுத்தும்.
2) வெளிநாட்டவர் இலங்கைப் பொருட்களை கொள்வனவு செய்வதை அதைரியப்படுத்தும்.
3) வெளிநாட்டு நாணயம் ஒன்றை கொள்வனவு செய்யத் தேவையான இலங்கை ரூபாவின் எண்ணிக்கை குறையும்.
4) வெளிநாட்டவர் அதிகளவில் இலங்கை பொருட்களுக்கு கேள்வியை ஏற்படுத்துவர்.
5) இலங்கையில் அதிகளவு வெளிநாட்டுப் பொருட்களை கொள்வனவு செய்ய ஊக்குவிக்கப்படுவர்.

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஐந்தாம் தவணைப் பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 5th Term Term Examination - 2022

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| பொருளியல் II<br>Economics II | Three Hours and ten minutes<br>Gr -13 (2022) | 21 | T | II |

பகுதி II

**அறிவுறுத்தல்** : உபபிரிவு "**அ**", உபபிரிவு "**ஆ**" ஆகியவற்றிலிருந்து குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

**உப பகுதி - 'அ'**

(இப்பிரிவிலிருந்து குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களை தெரிவு செய்க)

01) (i) உற்பத்தி இயல்தகவு வளையி, அடிப்படையாகக் கொண்டுள்ள எடுகோள்கள் யாவை? (4 புள்ளிகள்)

(ii) பொருளாதார வினைத்திறனை அடைவதற்குத் தேவையான நிபந்தனைகளை சுருக்கமாக விளக்குக. (4 புள்ளிகள்)

(iii) "நடைமுறைப் பொருளாதாரங்களில் உற்பத்திக்கு பயன்படுத்தக்கூடியதகவுள்ள சில வளங்கள் பயன்படுத்தப்படுவதில்லை மற்றும் வளங்கள் வேலைவாய்ப்பிலுள்ள போதும் உத்தமமாக பயன்படுத்தப்படுவதில்லை" இக்கூற்றுக்களின் பொருளியல் எண்ணக்கருக்களை குறிப்பிட்டு உற்பத்தி சாத்திய வளையியொன்றில் விளக்குக. (4 புள்ளிகள்)

(iv) "ரவி மற்றும் கவி இருவரும் மீன்பிடி வியாபாரம் ஒன்றினை நடாத்திவருகின்றனர் அவர்களிடம் தற்போது ஒரு படகு உள்ளது. மீன்பிடிக்கும் நாட்களில் சுஜித், சஜித் ஆகிய இருவரையும் தொழிலில் இணைந்துள்ளனர். உள்ளூர் நிறுவனங்களுக்கு விற்பனை செய்கின்றனர்" இதனுள்ள உற்பத்திக் காரணிகளை இனங்காண்க. (4 புள்ளிகள்)

(v) முயற்சியாண்மையின் பிரதான தொழிற்பாடுகள் யாவை? (4 புள்ளிகள்)

02) (i) நிறுவன நிரம்பல் வளைவியையும் சந்தைநிரம்பல் வளையியையும் வேறுபடுத்துக. (4 புள்ளிகள்)

(ii) உயர்ந்த விலையானது கேள்வித்தொகையினை ஏன் குறைவடையச் செய்கிறது. காரணங்களைத் தந்து உமது விடையினை விளக்குக. (4 புள்ளிகள்)

(iii) பொருளாதாரமொன்றின் கேள்வியையும் நிரம்பலையும் சமநிலைக்கு கொண்டுவர அதன் விலையானது அனுமதிக்கப்படவில்லையாயின் ஏற்படும் பொருளாதார விளைவுகள் யாவை? (4 புள்ளிகள்)

(iv) போட்டி சந்தையில் விற்கப்படும் ஒரு பொருளுக்கான கேள்வி மற்றும் நிரம்பல் வளையிகள் பின்வரும் சமன்பாடுகளால் காட்டப்படுகின்றன.

கேள்விச் சமன்பாடு – $Qd = 500 - 50p$

நிரம்பல் சமன்பாடு – $QS = -100 + 50p$

a) இப் பொருளுக்கான சமநிலை விலையையும் தொகையையும் காண்க. (2 புள்ளிகள்)

b) புதிய நிரம்பல் வளையி ஒன்று உட்புறமாக நகரும் போது வினைத்தினற்ற தொகை 100 ஆகவும் வெளிப்புறமாக நரும் போது வினைத்திறனற்ற தொகை 300 ஆகவுள்ளது எனின் மீளமுடியாத இழப்பக்களைக் கணிப்பிடுக. (4 புள்ளிகள்)

(v) மானியம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் உற்பத்தியின் எல்லைச் செலவு எல்லை நன்மைக்கு சமமாகக் காணப்படும் இக் கூற்றினை நீர் ஏற்றுக்கொள்கிறீரா காரணம் தருக. (2 புள்ளிகள்)

03) (i) நிரம்பல் விதியினை வரைவிலக்கணப்படுத்தி நிரம்பல் விதியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை விளக்குக. (4 புள்ளிகள்)

(ii) "விலைத்தளம்பல் விவசாய சந்தைகளின் அடிப்படைப் பண்பாடும் இதனால் விவசாயப் பொருள் வியாபாரத்தில் நிச்சயமற்ற தன்மை நிலவுகிறது" இக்கூற்றுடன் தொடர்புடைய பிரதான காரணிகளை விளக்குக. (5 புள்ளிகள்)

(iii) பின்வரும் பொருட்களின் வருமானக் கேள்வி நெகிழ்ச்சிப் பெறுமதிகளின் அடிப்படையில் நீர் எவ்வாறு ஆடம்பரப் பொருள், அத்தியாவசியப்பொருள், இழிவுப்பொருள் என வகைப்படுத்துவீர்.

அ) பொதுப் போக்குவரத்து 0.4

ஆ) பால் 1.2

இ) மீள் நிரப்பட்ட ரயர் 0.6

ஈ) வாசனைத்திரவியங்கள் 1.8 (4 புள்ளிகள்)

(iv) பொருளொன்றின் சந்தைக் கேள்வி மற்றும் நிரம்பல் வளையிகளை பின்வரும் சமன்பாடுகள் விபரிக்கின்றன.

$Qd = 100 – 5p$

$Qs = -20 + 5p$

a) சமன்பாடுகளைத் தீர்த்து சமநிலை விலை, சமநிலைத் தொகை என்பவற்றை நிர்ணயிக்குக. (2 புள்ளிகள்)

b) இச்சந்தையில் இப்பொருளின் உற்பத்தியாளர்களுக்கு அரசாங்கம் அலகொன்றிற்கு ரூபா 4 வரி விதிப்பதாக கருதுக வரிக்குப் பின்னர் பொருளியல் மிகையில் ஏற்பட்ட இழப்பு யாது? (5 புள்ளிகள்)

04) (i) வெளிப்படையான செலவுகள் மற்றும் உள்ளாந்த செலவுகள் என்பவை யாவை ஒவ்வொன்றுக்கும் தலா 2 உதாரணங்கள் தருக. (4 புள்ளிகள்)

(ii) இலங்கையில் விற்பனை செய்யப்படும் பின்வரும் பொருட்கள் சேவைகள் எந்த சந்தைக் கட்டமைப்தற்குள் உள்ளடக்கப்படும்.

a) வணிக விமானம்

b) பெற்றோல்

c) தனியார் கல்வி நிறுவனம்

d) புகையிரதம்

e) பச்சை அப்பிள்

f) மண்ணெண்ணை

g) நீர் வழங்கல் (4 புள்ளிகள்)

(iii) சிலருமைக்கும், தனியுரிமைப்போட்டிக்கும் இடையான வேறுபாடுகளைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(iv) நீண்டகால சராசரிச் செலவுக்கோடு மேல் நோக்கிச் செல்லும் போது அளவுத்திட்ட சிக்கனமின்மைகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. உள்வாரி வெளிவாரிச் சிக்கனமின்மைகளை குறிப்பிட்டு விளக்குக. (4 புள்ளிகள்)

(v) நிறைபோட்டி நிறுவனமொன்று வாரந்தம் 1000 வெள்ளை முட்டைகளை உற்பத்தி செய்து ரூபா 10 இற்கு விற்பனை செய்கின்றது 1000 முட்டைகளின் உற்பத்திச் செலவுகள் பின்வருமாறு

மொத்த நிலையான செலவு ரூ 4000

மொத்த மாறும் செலவு ரூ 8000

இந்நிறுவனம் தொடர்ந்து தொழிலில் நீடித்திருக்குமா காரணம் தருக. (4 புள்ளிகள்)

05) (i) சொத்து வருமானம் என்பதிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது? அதன் பிரதான கூறுகளை விளக்குக. *(4 புள்ளிகள்)*

(ii) "தேசிய கணக்கிட்டுப் புள்ளிவிபரங்கள் ஒரு நாட்டின் முழுப்பொருளாதாரத்தையும் விளங்கிக் கொள்வதற்குப் பகுப்பாய்வு செய்வததற்கும் ஒருவலுவான கருவியாகும்" இதற்கு அனுகூலமான ஆதாரங்களை முன்வைக்குக. *(4 புள்ளிகள்)*

(iii) தேசிய உற்நாட்டுஉற்பத்தி அல்லது தேறிய தேசிய வருமானத்தைவிட மொத்த உள்நாட்டு உற்பத்தி / மொத்த தேசியவருமானத்தை கனிப்பிடுவதை பொருளியல் வல்லுனர்கள் விரும்புவதேன். *(2 புள்ளிகள்)*

(iv) கருது கோள் ரீதியான பொருளாதாரம் குறித்த பின்வரும் தரவுகள் உமக்குதரப்படுகின்றன.

| விடயம் | பெறுமதி மில்லியன் ரூபா |
|---|---|
| மொத்த நுகர்வுச் செலவு | 13400 |
| மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் | 4600 |
| பொருள்கள் பணிகள் ஏற்றுமதி | 2900 |
| பொருள்கள் பணிகள் இறக்குமதி | 4200 |
| உலகம் முழுவதிலிருந்தான முதன்மை வருமானம் | -400 |
| உலகம் முழுவதிலிருந்தான தேறிய நடைமுறை மாற்றல் | 1600 |

மேலுள்ள தரவுகளைப்பபயன்படுத்தி பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

a) செலவிடத்தக்க மொத்த தேசிய வருமானம் *(2 புள்ளிகள்)*

b) மொத்த உள்நாட்டுச் சேமிப்பு *(2 புள்ளிகள்)*

(v) அரசதுறையற்ற மூடப்பட்ட பொருளாதாரமொன்றில் நுகர்வுத்தொழிற்பாடு

C = 200 + 0.4y ஆகவும்

I = 50 ஆகவும் தரப்படுவதாகக் கொள்க.

a) இவ்பொருளாதாரத்தில் சமநிலை வருமான மட்டம் யாது? *(2 புள்ளிகள:0*

b) சமநிலையின் போது சேமிப்புமட்டம் யாது? *(2 புள்ளிகள்)*

c) வருமானமட்டம் 800 ஆக இருப்பின் எதிர்பாாத கையிருப்புத் திரட்சி யாது? *(2 புள்ளிகள்)*

## பகுதி - ஆ

**(இப்பிரிவிலிருந்து குறைந்தது இரண்டு வினாக்களைத் தெரிவு செய்க.)**

06) (i) $M_2 b\ M_4$ ஆகிய பணக்கூட்டுக்களின் கூறுகளை குறிப்பிடுக. *(4 புள்ளிகள்)*

(ii) இலங்கையில் பொதுவிலைமட்டங்களை அளவிடப் பயன்படுத்தப்படும் நான்கு குறிகாட்டிகளை குறிப்பிடுக. *(4 புள்ளிகள்)*

(iii) வங்கி முறையில் உள்ள ஒரு வணிக வங்கியானது *1000* மில்லியன் காசு ஒதுக்குகளையும் *1200* மில்லியன் ரூபா முறிகளையம் *2400* மில்லியன் ரூபா கடன்களையும் *3800* மில்லியன் ரூபா வைப்புக்களையும் கொண்டிருப்பதாக கருதுக.

a) இவ்வங்கியின் ஐந்தொகையை தயார் செய்க. *(2 புள்ளிகள்)*

b) நியதி ஒதுக்கு தேவையின் அளவு 20% ஆயின் இவ்வங்கி புதிதாக வழங்கக்கூடிய கடன்களின் உச்ச அளவு யாது? *(2 புள்ளிகள்)*

(iv) பணப்பெருக்கி என்றால் என்ன? பணப்பெருக்கியை நிர்ணயிக்கும் பிரதான காரணிகள் யாவை? *(4 புள்ளிகள்)*

(v) பணநிரம்பலில் ஒரு சுருக்கத்தை ஏற்படுத்த மத்திய வங்கி திறந்த சந்தை நடவடிக்கைகளை எவ்வாறு பயன்படுத்தும் என விளக்குக. *(4 புள்ளிகள்)*

07) (i) "இயற்கை விவசாயம் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு உதவுகிறது" இக் குறிப்பிட்ட நடவடிக்கை பொருளாதார ரீதியில் செயல்திறனுள்ள மட்டத்தை விட குறைந்தளவில் சந்தைகள் உற்பத்தி செய்யும் நிலைமையினை வரைபடம் ஒன்றினை பயன்படுத்தி விளக்குக. (5 புள்ளிகள்)

(ii) பொதுப்பொருட்களையும் பொதுவளங்களையும் வரைவிலக்கணப்படுத்துக. அவை ஒவ்வொன்றுக்கும் 2 உதாரணங்கள் தருக. (5 புள்ளிகள்)

(iii) விகிதசமவரி, விருத்திமுறை வரி ஒடுங்குமுறைவரி என்பவற்றை வரைவிலக்கணப்படுத்துக. (5 புள்ளிகள்)

(iv) அரசாங்க தோல்வி என்பதன் கருத்து யாது? அரசாங்கம் தோல்வியடைவதற்கான காரணங்களைக் குறிப்பிடுக. (5 புள்ளிகள்)

08) (i) ஒப்பீட்டு நன்மை தோன்றுவதற்கான பிரதான மூலாதாரங்களை விளக்குக. (4 புள்ளிகள்)

(ii) ஒப்பீட்டு நன்மையையும் முழுநன்மையையும் வேறுபடுத்தக. (4 புள்ளிகள்)

(iii) போட்டி நன்மை என்பதனால் நீர் விளங்கிக் கொள்வது யாது? போட்டி நன்மையை உருவாக்கும் செலவு நன்மை மற்றும் பொருள் வேறாக்கல் மூலாதாரங்கள் தலா 2 குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(iv) இலங்கையில் ஒரு ஊழியரால் 20 மீற்றர் துணியை அல்லது 40kg தேயிலை உற்பத்தி செய்ய முடியும் இந்தியாவில் ஒரு ஊழியர் 60 மீற்றர் துணியை அல்லது 30kg தேயிலை உற்பத்தி செய்ய முடியும் எனக் கருதுக.

a) ஒவ்வொரு நாட்டினதும் உற்பத்திச்சாத்திய வளையியை வரைக. (2 புள்ளிகள்)

b) ஒவ்வொரு நாட்டிற்கும் எந்தப் பொருள் தொடர்பில் முழுநன்மை காணப்படுகிறது. உமது விடையை விளக்குக. (2 புள்ளிகள்)

c) ஒவ்வொரு நாட்டிற்கும் எந்தப் பொருள் தொடர்பில் ஒப்பீட்டு நன்மை காணப்படுகிறது உமது விடையை விளக்குக. (2 புள்ளிகள்)

d) இரு நாடுகளும் பரஸ்பரம் நன்மை அடைய வேண்டுமரின் வர்த்தக பரிமாற்று வீதம் எந்த எல்லைக்குள் இருக்க வேண்டும்? (2 புள்ளிகள்)

09) (i) வெளிநாட்டு நாணய மாற்று வீதத்தை கூறுகின்ற இரண்டு முறைகளையும் விளக்குக. (4 புள்ளிகள்)

(ii) மிதக்கும் நாணய மாற்று வீத முறையின் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் குறிப்பிடுக. (5 புள்ளிகள்)

(iii) இலங்கை ரூபாவினது வெளிநாட்டு பெறுமதி தேய்வால் இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்படக்கூடி விளைவுகள் யாவை? (5 புள்ளிகள்)

(iv) சென்மதிநிலுவையின் நடைமுறைக்கணக்கின் பிரதான கூறுகள் எவை? இக்கணக்கில் பற்றாக்குறை தோன்றுவதற்கான சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக. (6 புள்ளிகள்)

10) (i) நாடுகள் சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடுவதால் ஏற்படும் நன்மைகள் யாவை? (4 புள்ளிகள்)

(ii) சென்மதிநிலுவையிலுள்ள நேரடி முதலீகள், பட்டியல்படுத்தப்பட்ட என்பவற்றை வேறுபடுத்துக. (4 புள்ளிகள்)

(iii) ஒரு நாட்டின் வெளிநாட்டு வள இடைவெளி என்பதனால் கருதப்படுவது யாது? அதன் கணிப்பீட்டில் உள்ளடங்கும் விடயங்கள் யாவை? (4 புள்ளிகள்)

(iv) தாராள வர்த்தகத்தின் மீது கட்டுப்பாடுகளை விதிக்கப் பயன்படுத்தப்படும் தீர்வைத் தடைகள் மற்றும் தீர்வையில்லாத் தடைகள் யாவை? (4 புள்ளிகள்)

(v) ஒரு நாட்டின் உத்தியோக பூர்வ சொத்து ஒதுக்குகள் என்பதனால் கருதப்படுவது என்ன அதன் பிரதான கூறுகளைப் பட்டியல்படுத்துக. (4 புள்ளிகள்)